[28th February 1964

சிகிச்சை நிலையங்களை பெருவியாதித் தடுப்பு யூனிட்டுகளாக மாற்ற அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. இது நிறைவேறும் போது, இந்த தாலூகாவின் முழுப் பகுதியும் இந்த யூனிட்டின் மூலம் பயனடையும்.

* 108 கேள்வி.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை மாவட்டம் நிலக்கோட்டை தாலூகாவிலுள்ள பாலமேட்டில் ஒரு குஷ்டரோக நிவாரண ஆஸ்பத்திரி நிறுவ உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: The Government have sanctioned the establishment of one Survey, Education and Treatment Unit at Nilakottai, Madurai District. It has not yet started functioning due to the non-availability of trained Para Medical Workers. As soon as Para Medical Workers become available, the Unit will be started and then it will cover the Palamettu village also.

* 109 Q.—SRI . S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state with reference to Question No. 769 answered on 28th July 1962, the steps taken to open a Survey, Education and Treatment Unit at Dharmapuri for the treatment of leprosy patients?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: The Government have sanctioned a S.E.T. Unit for Dharmapuri. Due to paucity of trained Para Medical Workers, it has not been possible to open the Unit so far. It will be opened during 1964–65, when Para Medical Workers will be available for appointment.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொழுநோய் எங்கெல்லாம் இருக்கிறது என்கின்ற கணக்கு எடுக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படியானால் இந்த நோய் எந்தப் பகுதிகளில் எல்லாம் இருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியாதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எங்கெங்கே இருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியும். ஆனால் சென்ற வருடம் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டிருப்பதற்குத்தான் இல்லை என்று சொன்னேன்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே இந்த தொழு நோயை ஒழிப்பதற்கு "ஹிந்த் குஷ்ட நிவாரண் சங்க்" என்ற ஒரு அமைப்பு இருக்கிறதே, அது தனியார் ஸ்தாபனமா அல்லது சர்க்கார் ஸ்தாபனமா, அதற்கு ஏதாவது சர்க்காரின் சலுகைகள் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த ஸ்தாபனத்திற்கு அரசாங்கம் சலுகை கொடுத்து வருகிறது. இதற்காக இருக்கின்ற கமிட்டியில் சுகாதார அமைச்சர்தான் செயர்மென்னாக இருக்கிறார்கள்.